**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.70/2020**

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Deposition of Witness for** | | | **DW 2** | | |
| பெயர் | ° | சீனிவாசன் | தொழில் | ° | கைத்தறி |
| தந்தை பெயர் | ° | சோமசுந்தரம் | வயது | ° | 33 |
| கிராமம் | ° | சைதாப்பேட்டை | | ° | |
| தாலுக்கா | ° | ஆரணி | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 04.02.2026.** **நேரம் - 12.30**

சாட்சியின் அடையாளம் - ஆதார் அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து கைத்தறி வேலை செய்து வருகிறேன். நான் பிரதிவாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் கீழ்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்கிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பத்திரம் உயில் பத்திரமாகும். அதில் நான் சாட்சி கையொப்பம் லட்சுமியம்மாள் சொல்லிதான் கையொப்பம் இட்டேன். எனக்கு எழுதப் படிக்க தெரியாது. மேற்படி பத்திரம் உயில் ரத்து பத்திரமாகும். மேற்படி பி.வா.சா.ஆ.2 ரத்து உயில் பத்திரத்தில் முதல் சாட்சி கையொப்பம் நான் இட்டேன். அதன் பின்னிட்டு என் உறவினர் பழனி சாட்சி கையொப்பமிட்டார். என்னுடைய கையொப்பம் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. ரத்து பத்திரம் யாருக்கு எழுதி வைத்த சொத்தை ரத்து செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சாட்சி கையொப்பமிட சொன்னதால் நான் சாட்சி கையொப்பமிட்டேன். என்னிடம் படித்து காண்பித்த பின்னர்தான் பத்திரத்தில் கையொப்பமிட்டேன். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பமாக 2வது இடத்தில் கையொப்பமிட்டுள்ளேன். என்னுடைய கையொப்பம் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி 2 பத்திரங்களும் ஒரே தேதியில் ஏற்படுத்தப்பட்ட பத்திரமாகும். மேற்படி பி.வா.சா.ஆ.3 உயில் பத்திரமாகும், அது கோகுலகிருஷ்ணன் என்பவருக்கு லட்சுமியம்மாள் சுய நினைவோடுதான் எழுதி மேற்படி பத்திரத்தை எழுதி கொடுத்தார்.

3. மேற்படி பத்திரத்தில ் உள்ள கைரேகை யாருடையது என்றால் லட்சுமியம்மாளுடையது. என் முன்னிலையில்தான் லட்சுமியம்மாள் கைரேகை வைத்தார். நானும் அவர் முன்னிலையில்தான் கையொப்பம் இட்டேன். சார்பதிவாளர் அலுவலகத்திலும் நான் கையொப்பமிட்டேன்.

**முதல் விசாரணை முடிவடைந்தது.**

**வாதி தரப்பு வழக்கறிஞரின ் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

**நேரம் - 12.45**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni